# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 210/2015**

பெயர்: மகேஸ்வரி நாள்: 12.10.2023

பி.வா.சா.1 – வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

பி.வா.சா.1 – மகேஸ்வரி - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 11.17</u>

சர்வே எண் 384/1 ல் உள்ள நிலம் மற்றும் வீடு எனது தாயார் குட்டியம்மாளுக்கு பாத்தியப்பட்டதாகும். சர்வே எண் 384/1 க்கு கிழக்குபுறத்தில் தென்வடலாக செல்லும் வண்டிப்பாதைக்கான சர்வே எண் 384/4 என்றால், சரிதான். சர்வே எண் 384/1 க்கு தெற்குபுறம் உள்ள சர்வே எண் 384/2 ல் ஒரு காங்கிரீட் சாலை என்றால், சரிதான். எனது தாயார் உயிருடன் இருந்த போதிதிருந்தே சர்வே எண் 384/4 ல் செல்லும் தடத்தின் வழியாகத்தான் சர்வே எண் 384/1 ஐ சென்றடைந்து வந்தார் என்று சொன்னால், சரியல்ல. எனது தாயார் வீட்டிற்கு சர்வே எண் 384/6 ன் வழியாகத்தான் செல்ல முடியும். நாங்கள் சர்வே எண் 384/4 ல் உள்ள வண்டித்தடத்தின் வழியாகத்தான் எனது தாயாருக்கு சொந்தமான நிலத்தை சென்றடைகிறோம் என்றாலும், அதை மறைத்து சர்வே எண் 384/6 ன் வழியாக சென்றடைவதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

2) சர்வே எண் 384/5 ல் வண்டிப்பாதை தடம் இருந்திருந்தால் புல வரைபடத்தில் அதற்கான விலக்கி குறியீடு குறிப்பிடப்பட்டிருக்கும் என்று சொன்னால், சர்வே எண் 384/5 ல் கோவில்தான் உள்ளது, சாலை எதுவும் இல்லை. சர்வே எண் 384/3 ல் உள்ள நிலம் அரசு புறம்போக்கு என்றால், சரியல்ல. அது எனது தாயாருக்கு சொந்தமான நிலமாகும். சர்வே எண் 384/5, 384/6 ல் உள்ள நிலங்கள் கோவில் சம்பந்தப்பட்ட காலி நிலங்கள் என்று சொன்னால், சரியல்ல. சர்வே எண் 381/1 ல் உள்ள நிலங்கள் அண்ணாமலையார் திருக்கோவிலுக்கு பாத்தியப்பட்ட நிலங்கள் என்று சொன்னால், சரியல்ல. சர்வே எண் 381/1 ல் உள்ள நிலங்கள் அண்ணாமலையார் திருக்கோவிலுக்கும், அரசு தொடக்கப் பள்ளிக்கு சம்பந்தப்பட்ட நிலங்கள் என்று சொன்னால், சரியல்ல.

3) சர்வே எண் 381/1 ஆனது எனது தாயார் பெயரில் வருவாய் ஆவணங்கள் உள்ளதை பயன்படுத்தி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல. சர்வே எண் 384/6 லும் எனது தாயார் பெயர் வருவாய் ஆவணங்களை தவறுதலாக சேர்க்கப்பட்டுள்ளது என்று சொன்னால், சரியல்ல. வழக்கு சொத்தான சர்வே எண் 384/6 ஐ எனது தாயார் உயிருடன் இருந்தபோதே கோவிலுக்காக கொடுத்துவிட்டார் என்று சொன்னால், சரியல்ல. சர்வே எண் 384/6 ஐ பொறுத்து எனது தாயார் உயிருடன் இருந்தபோது மேற்படி சொத்தை பொறுத்து தவறுதலாக வருவாய் ஆவணங்கள் ஏற்பட்டிருந்த காரணத்தினால்தான் தனது பெயரில் பட்டா, சிட்டா ஆகியவைகள் பெறவில்லை என்று சொன்னால், சரியல்ல. மேலும் கிராமத்தில் உள்ள பல சர்வே எண்களில் எனது தாயார் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது என்று சொன்னால், சரியல்ல.

4) 2 ம் பிரதிவாதி வழக்கறிஞர் என்பதால் அவர் தன்னுடைய அதிகாரத்தை பயன்படுத்தி மோசடியாக அவருடைய மாமியார் பெயரை வருவாய் ஆவணங்களை மாற்றினார் என்று சொன்னால், சரியல்ல. இந்த விபரம் 2 ம் பிரதிவாதியை விசாரித்தால் தெரிந்துவிடும் என்பதால்தான், அவருக்காகவும் நானே முதன்மை சாட்சியம் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. வழக்கு சொத்தானது ஒருபோதும் என்னுடைய அனுபவத்தில் இல்லையென்றாலும், அது கோவிலுக்கு உரிமையானது என்று சொன்னாலும், சரியல்ல. வழக்கு வழக்குரைப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 11:45

ஒப்பம்/மகேஸ்வரி

ஒப்பம்/திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.